முழுப் பதிப்புரிமையுடையது

# இலங்கை கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் கழகம்

## மட்டம் III பரீட்சை – 2023 சனவரி

## (302) முகாமைத்துவக் கணக்கீடும் நிதியியலும்

(Management Accounting and Finance)

2023-02-26
முற்பகல்
[8.45 – 12.00]

பக்கங்கள் : 09
வினாக்கள் : 10

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
*விடையெழுத : 03 மணித்தியாலம்*

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடை தருக.***

(3) ***விடைகள்*** *உமக்கு வழங்கப்படும்* ***விடைப்புத்தகத்தில்*** *நீர் பரீட்சை எழுத விண்ணப்பித்த* ***அதே மொழியில்*** *எழுதப்பட வேண்டும்.*

(4) *சகல செய்முறைகளையும் கணிப்பீடுகளையும் காட்டுக. எடுகோள்கள் எதனையும் மேற்கொண்டிருந்தால் அவற்றை தெளிவாக குறிப்பிடுக.*

(5) *நிரற்படுத்தப்படாத கணிப்பான்களின் பாவனை* ***மாத்திரம்*** *அனுமதிக்கப்படும்.*

(6) ***செயல் வினைச் சொற்களின் செவ்வை நிரல்*** *அவற்றின்* ***வரைவிலக்கணங்களுடன்*** *இணைக்கப் பட்டுள்ளது. ஒவ்வொரு வினாவும் ஒரு செயல் வினைச்சொல்லைக் கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் வினாக்களுக்கான விடைகளை* ***செயல் வினைச் சொற்களின் செவ்வை நிரலில்*** *தரப்பட்டுள்ள வரைவிலக்கணத்தின் அடிப்படையில் எழுதுதல் வேண்டும்.*

(7) ***கணித அட்டவணை*** *வழங்கப்படும்.*

(8) *100 புள்ளிகள்.*

---

## பகுதி A

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 01

**வரையறுக்கப்பட்ட X கம்பனி** சமையலுக்கான சுவையூட்டிகளைத் தயாரித்து கண்ணாடிப் போத்தல்களில் அடைத்து, சிறப்பங்காடிகளில் சில்லறையாக விற்பனை செய்வதில் ஈடுபட்டுள்ளது. அது அண்மையில் **சுவையூட்டி Y** என்ற ஒரு புதிய பொருளை சந்தைக்கு அறிமுகப்படுத்தியுள்ளது. கீழ்வரும் தகவல்கள் **சுவையூட்டி Y** இன் நியமக் கிரய அட்டையிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

| | **ஒரு போத்தல் சுவையூட்டி Y இற்கானது (ரூபா)** |
|---|---|
| நேர் பொருள் | 240 |
| நேர் கூலி | 60 |
| மாறும் மேந்தலைகள் | 120 |

ஒரு போத்தல் **சுவையூட்டி Y** இன் விற்பனை விலை ரூபா 820/-.

மாதாந்த குறித்த நிலையான மேந்தலைகளின் தொகை ரூபா 95,000/- ஆகவுள்ள அதே வேளை பொதுவான நிலையான மேந்தலைகளின் 10% மான ரூபா 650,000/- ஆனது **சுவையூட்டி Y** இற்கு ஒதுக்கப்படும்.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) மாதாந்த சமநிலைப் புள்ளியை (break – even point) அலகுகளில் **கணிக்குக.** (03 புள்ளிகள்)

(b) முதலாவது மாதத்தில் 450 போத்தல்கள் விற்பனை செய்யப்பட வேண்டுமென இலக்கு நிர்ணயிக்கப் பட்டிருப்பின், இலக்கு வைக்கப்பட்ட இலாபத்தைக் **கணிக்குக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 02

**வரையறுக்கப்பட்ட என்கேஜ் கம்பனி** வாடிக்கையாளர்களின் விருப்பத்திற்கேற்ப நகைகளைத் தயாரித்து விற்பனை செய்வதில் ஈடுபட்டுள்ளது. கீழ்வரும் தகவல்கள் **வரையறுக்கப்பட்ட என்கேஜ் கம்பனியின்** நிதிக் கூற்றுக்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

| டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது | 2022 | 2021 |
|---|---|---|
| வருமானம் (ரூபா) | 24,000,000 | 16,000,000 |
| விற்பனை மீதான GP எல்லை | 28% | 32% |
| தொக்கு (ரூபா) | 4,532,930 | 3,752,000 |
| வியாபார சென்மதிகள் (ரூபா) | 4,868,200 | 2,185,827 |

வியாபார வருமதிகள் புரள்வு விகிதம் 3.5 தடவைகள் எனக் கணிப்பிடப்பட்டுள்ளதுடன் அனைத்து கொள்வனவுகளும் விற்பனைகளும் கடன் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**நீங்கள் செய்யவேண்டியது :**

2022 ஆம் ஆண்டிற்கான தொழிற்படு மூலதனச் சுற்றுக் காலத்தை (நாட்களில்) **கணிக்குக.** (05 புள்ளிகள்)

## வினா 03

**பொருள் P** ஐ உற்பத்தி செய்து விற்பனை செய்வதில் ஈடுபடுகின்ற **வரையறுக்கப்பட்ட டொப் கம்பனி,** கடந்த ஒரு தசாப்தத்திற்கும் மேலாக சந்தையில் முன்னணி நிறுவனமாக விளங்கியது. 2022 இல், கம்பனி அதன் சந்தைப் பங்கினை 1,800,000 அலகுகள் என்ற விற்பனைத் தொகையுடன் 60% இல் பேணுவதற்கு எதிர்பார்த்தது.

எவ்வாறாயினும், மொத்த சந்தை அளவு மாறாது காணப்பட்ட போதிலும், மிக நவீனமான புதிய பொருளின் வருகை காரணமாக, சந்தைப் பங்கு 2022 இல் 54% இற்குக் குறைவடைந்தது. சந்தைப் பங்கு குறைவடைந்ததன் விளைவாக, 2023 இல் மொத்த சந்தை அளவில் சந்தைப் பங்கினை மீண்டும் 60% இற்கு உயர்த்துவதற்கு உதவுமுகமாக கம்பனியானது ஒரு புதிய சந்தைப்படுத்தல் ஆலோசகரை வாடகைக்கு அமர்த்தியது. கம்பனியின் சந்தைப்படுத்தல் ஆலோசகர் 2023 இல் சந்தை 4% இனால் உயரும் எனவும் 60% என்ற சந்தைப் பங்கினை 2023 இல் மீண்டும் அடைய முடியும் எனவும் நம்புகிறார்.

2022 இல் பொருளானது அலகொன்று ரூபா 500/- விலையில் விற்கப்பட்டதுடன், சந்தைப் பங்கு இலக்கினை அடைந்து கொள்வதற்காக 2023 இல் 12% கழிவு (தள்ளுபடி) வழங்குமாறு சந்தைப்படுத்தல் ஆலோசகர் பரிந்துரைத்துள்ளார்.

2023 சனவரி 01 இல் ஆரம்ப முடிவுப் பொருள்களின் இருப்பு 150,000 அலகுகளாக இருக்குமென எதிர்பார்க்கப்படுவதுடன் ஆக்ரோசமாகப் போட்டியிடும் வகையில் முடிவுப் பொருள்களை ஆண்டின் இறுதியில் 2 மாத சராசரி விற்பனைக்குச் சமமாகப் பேணுவதற்கு கம்பனி எதிர்பார்க்கிறது.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

கீழ்வருவனவற்றைத் **தயாரிக்குக :**

(a) 2023 இற்கான விற்பனைப் பாதீடு – அலகுகளிலும் பெறுமதியிலும். (03 புள்ளிகள்)

(b) 2023 இற்கான உற்பத்திப் பாதீடு – அலகுகளில். (02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 04

**வரையறுக்கப்பட்ட BC கம்பனி** பல வகையான பொருள்களையும் தயாரித்து விற்பனை செய்வதில் ஈடுபட்டுள்ளது. அது அண்மையில் பொருள் ஒன்றை விருத்தி செய்திருந்ததுடன் அது தற்போது வர்த்தக ரீதியான உற்பத்திக்குத் தயாராக இருக்கிறது. இந்த நோக்கத்திற்காக, அச்சு ஒன்றை உருவாக்க வேண்டியுள்ளதுடன் அதனை உள்ளக ரீதியாக உருவாக்கவோ அல்லது வெளித் தரப்பினரிடமிருந்து வாங்கவோ முடியும்.

அச்சு உள்ளக ரீதியாகத் தயாரிக்கப்பட்டால், அதன்பால் கீழ்வரும் கிரயங்கள் ஏற்படும் :

(1) அச்சை உருவாக்குவதற்கான மூலப் பொருள்களுக்கு தேவைப்படும் தொகை ரூபா 420,000/- ஆகும். இதில் ரூபா 130,000/- பெறுமதியான மூலப்பொருள்கள் இருப்பில் காணப்படுகின்றன. அவை பல வருடங்களுக்கு முன்னர் ரூபா 95,000/- இற்கு கொள்வனவு செய்யப்பட்டவை என்பதுடன் அவற்றை கம்பனியின் வழமையான உற்பத்திக்குப் பயன்படுத்த முடியாது, இருப்பிலுள்ள இந்தப் பொருளை அச்சை உருவாக்குவதற்கு பயன்படுத்தாதுவிடின், அதனை ரூபா 45,000/- இற்கு விற்பனை செய்ய முடியும்.

(2) அச்சை உருவாக்க 80 கூலி மணித்தியாலங்கள் தேவைப்படும் என்பதுடன் கூலியானது சாதாரணமாக மணித்தியாலமொன்றுக்கு ரூபா 300/- என்ற அடிப்படையில் செலுத்தப்படுகிறது. அச்சை உருவாக்கு வதற்குத் தேவையான ஊழியர்கள் தற்போது முழுமையாக வேறு உற்பத்திப் பணிகளில் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர். எவ்வாறாயினும், அச்சை உருவாக்குவதற்கு சாதாரணமாகச் செலுத்தப்படும் கூலி வீதத்தில் 1.5 மடங்கு வீதத்தில் மேலதிக நேரக் கொடுப்பனவை அவர்களுக்குச் செலுத்த முடியும்.

(3) மாறும் உற்பத்தி மேந்தலைகள், கூலி மணித்தியாலம் ஒன்றிற்கு ரூபா 110/- என்ற அடிப்படையில் செலவு செய்யப்படும்.

(4) அச்சின் குறிப்பிட்ட சில பாகங்களை உருவாக்க விசேட ஊழியர்கள் தேவைப்படுவர். இதற்கான கிரயம் ரூபா 250,000/-.

மாற்றுவழியாக, வெளித் தரப்பினரிடமிருந்து ரூபா 700,000/- இற்கு அச்சைக் கொள்வனவு செய்ய முடியும்.

**நீங்கள் செய்யவேண்டியது :**

கம்பனியானது அச்சை உள்ளக ரீதியாக உருவாக்க வேண்டுமா, இல்லையா என்பதை **மதிப்பிடுக.** உமது விடைக்கு ஆதரவான கணிப்பீடுகளையும் தருக (05 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

# பகுதி B

(மொத்தம் 30 புள்ளிகள்)

## வினா 05

**வரையறுக்கப்பட்ட லினன் கம்பனி** கையால் பூ வேலைப்பாடுகள் செய்யப்பட்ட கைத்தறி மேசைகளை 6 இருக்கைகள், 8 இருக்கைகள் மற்றும் 12 இருக்கைகள் போடக்கூடியவாறு 3 அளவுகளில் தயாரித்து விற்பனை செய்வதில் ஈடுபட்டுள்ளது. கீழ்வரும் தகவல்கள் **வரையறுக்கப்பட்ட லினன் கம்பனியின்** நியமக் கிரய அட்டையிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

| | **ரூபா (அலகொன்றிற்கு)** | | |
|---|---|---|---|
| | **6 இருக்கைகள்** | **8 இருக்கைகள்** | **12 இருக்கைகள்** |
| விற்பனை விலை | 5,000 | 7,500 | 12,000 |
| நேர் பொருள் (மீற்றரொன்று ரூபா 450/-) | 1,125 | 1,800 | 2,700 |
| தையல் கூலி (மணித்தியாலமொன்றுக்கு ரூபா 300/-) | 300 | 375 | 450 |
| பூ வேலைப்பாடுகளுக்கான கூலி (மணித்தியாலமொன்றுக்கு ரூபா 500/-) | 2,500 | 4,000 | 6,000 |
| மாறும் உற்பத்தி மேந்தலைகள் | 500 | 600 | 800 |

| | | | |
|---|---|---|---|
| 2023 மார்ச் மாதத்திற்காகப் பாதிடப்பட்ட விற்பனை அலகுகள் | 30 | 15 | 8 |

2023 மார்ச் மாதத்திற்குக் கிடைக்கக்கூடிய வளங்கள் கீழ்வருமாறு :

| | |
|---|---|
| நேர் மூலப்பொருள் | 190 மீற்றர்கள் |
| தையல் கூலி | 100 மணித்தியாலங்கள் |
| பூ வேலைப்பாட்டுக் கூலி | 302 மணித்தியாலங்கள் |

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) ஆதரவான கணிப்பீடுகளுடன் வரையறைக் காரணி / காரணிகளை **அடையாளங் காண்க.** (04 புள்ளிகள்)

(b) இனங்காணப்பட்ட வரையறைக் காரணி / காரணிகளின் அடிப்படையில் உத்தம உற்பத்திக் கலவையை (optimal production mix) **கணிப்பிடுக.** (06 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 06

**வரையறுக்கப்பட்ட வெல்த் கம்பனி பொருள் X** இனை தொகையளவில் கொள்வனவு செய்து, அதனை 1 kg கொண்ட சிறிய பொதிகளாக அடைத்து விற்பனையாளர்களைக் கொண்ட ஒரு வலையமைப்பின் ஊடாக விற்பனை செய்கிறது. கீழ்வரும் தகவல்கள் **பொருள் X** இன் 1 kg பொதியின் நியமக் கிரய அட்டையிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

| | **1 kg பொதி (ரூபா)** |
|---|---|
| கொள்வனவுகள் : | |
| **பொருள் X** (கிலோகிராமொன்று ரூபா 1,100/-) | 1,100 |
| பொதியிடும் பொருள்கள் (1 kg பொதியொன்றுக்கு ரூபா 170/-) | 170 |
| பொதியிடல் கூலிக் கிரயம் | 30 |
| விற்பனை விலை | 2,000 |

செயற்பாடு தொடர்பான கீழ்வரும் தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன :

(1) 2022 நவெம்பர் மாதம் தொடக்கம் 2023 ஏப்ரல் மாதம் வரையான விற்பனைகள் மற்றும் கொள்வனவுகள் பற்றிக் கீழ்வருமாறு பாதிடப்பட்டுள்ளது :

| | **நவெம்பர் 22** | **டிசெம்பர் 22** | **சனவரி 23** | **பெப்ரவரி 23** | **மார்ச் 23** | **ஏப்ரல் 23** |
|---|---|---|---|---|---|---|
| **விற்பனைகள் ( 1 kg பொதிகள்)** | 80,000 | 110,000 | 50,000 | 50,000 | 80,000 | 100,000 |
| **கொள்வனவுகள் (kgs)** | 140,000 | 120,000 | 40,000 | 75,000 | 70,000 | 50,000 |

(2) **பொருள் X** இன் விலை 2023 மார்ச் இல் 8% இனால் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இதன் விளைவாக 2023 மார்ச் இலிருந்து விற்பனை விலையை 10% இனால் அதிகரிப்பதற்கு கம்பனி எதிர்பார்க்கிறது.

(3) 90% விற்பனைகள் விற்பனையாளர்கள் (dealers) ஊடாக மேற்கொள்ளப்படுவதுடன் ஏனைய விற்பனைகள் காசு அடிப்படையில் இடம்பெறுகின்றன.

(4) விற்பனையாளர்கள் ஊடான விற்பனையில் 70% ஆனவை 60 நாள் கடன் தவணையின் அடிப்படையிலும் மீதியானது 30 நாள் கடன் தவணையின் அடிப்படையிலும் இடம்பெறுகின்றன.

(5) **பொருள் X** இன் கொள்வனவு 90 நாள் கடன் தவணை அடிப்படையில் மேற்கொள்ளப்படுகிறது.

(6) பொதி செய்யும் பொருள்கள் அது பயன்படுத்தப்படுகின்ற மாதத்திலேயே கொள்வனவு செய்யப்பட்டு, கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(7) பொதி செய்வதற்கான கூலி அது மேற்கொள்ளப்படுகின்ற மாதத்திலேயே செலுத்தப்படுகிறது.

(8) மாதாந்த நிருவாகச் செலவினம் ரூபா 800,000/- ஆக இருப்பதுடன் அதில் 60% ஆனவை செலவு செய்யப்படும் மாதத்திற்கு அடுத்துவரும் மாதத்தில் செலுத்தப்படுகிறது.

(9) 2023 பெப்ரவரி 01 இல் ஆரம்ப காசு மீதி ரூபா 1,200,000/- ஆக இருக்குமென எதிர்பார்க்கப் படுவதுடன் மிகையான காசு வருடாந்தம் 8% வட்டியைச் சம்பாதிக்கக்கூடிய சேமிப்புக் கணக்கொன்றில் வைத்திருக்கப்படும். வட்டியானது மாத ஆரம்பத்தில் உள்ள ஆரம்ப மீதியின் அடிப்படையில் கணிப்பிடப்படுகிறது.

**நீங்கள் செய்யவேண்டியது :**

2023 பெப்ரவரி, மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களுக்கான காசுப் பாதீட்டைத் **தயாரிக்குக.** (10 புள்ளிகள்)

## வினா 07

**என்டபிரைசஸ் PLC** என்பது கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்தில் பட்டியலிடப்பட்ட ஒரு கம்பனி ஆகும். கீழ்வரும் தகவல்கள் **என்டபிரைஸ் PLC** இன் நிதிக் கூற்றுக்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன:

(1) **என்டபிரைஸ் PLC** ஆனது பங்கொன்று ரூபா 5/- விலையில் விநியோகிக்கப்பட்ட 100 மில்லியன் சாதாரண வாக்குரிமைப் பங்குகளை விநியோகத்தில் கொண்டுள்ளது. பங்கொன்று தற்போது ரூபா 3.20 விலையில் வர்த்தகம் செய்யப்படுவதுடன் கம்பனியானது கடந்த நிதியாண்டிற்காக பங்கொன்றிற்கு ரூபா 0.80 பங்கிலாபத்தைச் செலுத்தியிருந்தது. தற்போதைய பொருளாதாரச் சரிவைக் கவனத்தில் கொண்டு, அடுத்த ஆண்டில் பங்கிலாபம் வளர்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படவில்லை.

(2) கம்பனி 25 மில்லியன் மீட்கப்பட முடியாத முன்னுரிமைப் பங்குகளை விநியோகத்தில் கொண்டிருப் பதுடன் பங்கொன்று ஆரம்பத்தில் ரூபா 10 விலையில் விநியோகிக்கப்பட்டது. இந்த முன்னுரிமைப் பங்குகளின் தற்போதைய சந்தை விலை பங்கொன்று ரூபா 8.00 என்பதுடன் பங்கொன்றிற்கான வருடாந்த பங்கிலாபம் ரூபா 1.80 ஆகும்.

(3) கம்பனியானது, தனிச்சமொன்று ரூபா 100/- விலையில் விநியோகிக்கப்பட்டதும் 12% வருடாந்த கூப்பன் வீதத்தைக் கொண்டுள்ளதுமான 1.5 மில்லியன் பட்டியலிடப்பட்ட 5 வருட மீட்கத்தக்க தனிச்சங்களையும் கொண்டிருக்கிறது. தனிச்சமொன்று ரூபா 85/- விலையில் தற்போது வர்த்தகம் செய்யப்படுகிறது.

வருமான வரி வீதம் 24% எனக் கொள்க.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

கீழ்வருவனவற்றைக் **கணிப்பிடுக :**

(a) சாதாரண வாக்குரிமைப் பங்குகளின் கிரயம் (02 புள்ளிகள்)

(b) மீட்கப்பட முடியாத முன்னுரிமைப் பங்குகளின் கிரயம் (02 புள்ளிகள்)

(c) மீட்கப்படத்தக்க தனிச்சங்களின் கிரயம் (03 புள்ளிகள்)

(d) சந்தைப் பெறுமதியைப் பயன்படுத்தி, நிறையேற்றப்பட்ட சராசரி மூலதனக் கிரயம் (WACC). (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

## பகுதி C

(மொத்தம் 50 புள்ளிகள்)

### வினா 08

**வரையறுக்கப்பட்ட எக்ஸ்புளோர் கம்பனி பொருள் W** ஐ உற்பத்தி செய்து விற்பனை செய்கிறது. கீழ்வரும் தகவல்கள் அந்தக் கம்பனியின் நியமக் கிரய அட்டையிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

| | **அலகொன்று (ரூபா)** |
|---|---|
| நேர் பொருள் (500 மில்லிலீற்றர் - லீற்றரொன்று ரூபா 900/- வீதம்) | 450 |
| நேர் கூலி : | |
| திறமையான கூலி (2 மணித்தியாலங்கள் - மணித்தியாலமொன்றுக்கு ரூபா 300/- வீதம்) | 600 |
| திறமையற்ற கூலி (½ மணித்தியாலம் - மணித்தியாலமொன்றுக்கு ரூபா 180/- வீதம்) | 90 |
| மாறும் மேந்தலைகள் (மணித்தியாலமொன்றுக்கு ரூபா 70/-) | 175 |
| **மொத்த மாறும் கிரயம்** | **1,315** |
| விற்பனை விலை | 1,550 |
| **அலகொன்றிற்கான பங்களிப்பு** | **235** |

2022 டிசெம்பர் 31 இல் முடிவடையும் காலாண்டிற்கான பாதிடப்பட்ட விற்பனை அலகுகள் மற்றும் பாதிடப்பட்ட நிலையான மேந்தலைகள் முறையே 300,000 அலகுகளாகவும் ரூபா 12,600,000/- ஆகவும் இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

2022 டிசெம்பர் 31 இல் முடிவடையும் காலாண்டிற்கான உண்மையான செயலாற்றுகையானது முகாமையால் கணிப்பிடப்பட்ட முரண்களுடன் சேர்த்து கீழே தரப்பட்டுள்ளது :

| | **(ரூபா)** |
|---|---|
| விற்பனை வருமானம் | 480,000,000 |
| நேர் பொருள் (166,400 லீற்றர்) | 152,064,000 |
| நேர் கூலிக் கிரயம் : | |
| திறமையான கூலி (624,000 மணித்தியாலங்கள்) | 199,680,000 |
| திறமையற்ற கூலி (168,000 மணித்தியாலங்கள்) | 27,720,000 |
| மாறும் மேந்தலைகள் | 59,004,000 |
| நிலையான மேந்தலைகள் | 13,800,000 |

கீழ்வரும் முரண்கள் 2022 டிசெம்பர் 31 இல் முடிவடையும் காலாண்டிற்காக முகாமையால் கணிப்பிடப்பட்டுள்ளன:

| | | |
|---|---|---|
| விற்பனை எல்லைக் கனவளவு முரண் | 4,700,000 | சாதகமானது |
| நேர் பொருள் பாவனை முரண் | 5,760,000 | பாதகமானது |
| நேர் பொருள் விலை முரண் | 2,304,000 | பாதகமானது |
| மாறும் மேந்தலை செலவின முரண் | 3,564,000 | பாதகமானது |
| மாறும் மேந்தலை வினைத்திறன் முரண் | 560,000 | சாதகமானது |
| நிலையான மேந்தலை செலவின முரண் | 1,200,000 | பாதகமானது |

2022 டிசெம்பர் 31 இல் முடிவடையும் காலாண்டிற்கான உண்மையான விற்பனை / உற்பத்திக் கணியம் 320,000 அலகுகளாகும்.

***நீங்கள் செய்யவேண்டியவை :***

(a) கீழ்வரும் முரண்களைக் **கணிக்குக** :

(i) நேர் கூலி வீத முரண். (02 புள்ளிகள்)

(ii) நேர் கூலி கலவை முரண். (03 புள்ளிகள்)

(iii) நேர் கூலி விளைவு முரண். (03 புள்ளிகள்)

(iv) விற்பனை விலை முரண். (02 புள்ளிகள்)

(b) பாதிடப்பட்ட பங்களிப்பை உண்மையான பங்களிப்புடன் இணக்கம் செய்வதற்காக தொழிற்பாட்டுக் கூற்றினைத் (Operating Statement) **தயாரிக்குக.** (05 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

## வினா 09

**வரையறுக்கப்பட்ட கொம்போர்ட் கம்பனி** மூன்றாம் தரப்பினர்களுக்குச் சொந்தமான ஹோட்டல்களை முகாமை செய்கிறது. தற்போது, ஒரு புதிய ஆதனத்தை முகாமை செய்வதன் சாத்தியத்தன்மை பற்றி கம்பனி மதிப்பீடு செய்கிறது. அந்தப் புதிய ஆதனம் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன :

(1) உரிமையாளர்களுக்கு 1 ஆவது ஆண்டிற்காகச் செலுத்த வேண்டிய மாதாந்த வாடகை ரூபா 1,000,000/- ஆக இருப்பதுடன் இது அடுத்த ஆண்டிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் 8% அதிகரிப்பைக் கொண்டிருக்கும். உடன்படிக்கையானது 5 ஆண்டுகளுக்கு கைச்சாத்திடப்படுகிறது. முதலாவது ஆண்டு வாடகையிலிருந்து 25% கழிவொன்றை வழங்குவதற்கு உரிமையாளர்கள் உடன்பட்டுள்ளனர். மேலுள்ளவற்றிற்குப் புறம்பாக, மூன்றாவது ஆண்டிலிருந்து உரிமையாளர்கள் வருமானத்தில் 4% இற்கு உரித்துடையவர்களாக இருப்பர்.

(2) ஹோட்டலுக்குத் தேவையான வசதிகளை அளிப்பதற்கான கிரயம் ரூபா 75 மில்லியனாக இருக்கும். தளபாடங்களும் பொருத்துகளும் 5 வருட ஆயுட்காலத்தைக் கொண்டிருக்குமென எதிர்பார்க்கப்படுவதுடன் மூலதன விடுதொகைகள் (capital allowances) 25% இல் கோரப்பட முடியும். தளபாடங்கள் கணக்கீட்டு நோக்கங்களுக்காக நேர்கோட்டு அடிப்படையில் தேய்மானம் செய்யப்படுகின்றன. தளபாடங்களும் பொருத்துகளும் 5 ஆவது ஆண்டின் இறுதியில் ரூபா 10 மில்லியன் ஒடிவுப் பெறுமதியை (scrap value) கொண்டிருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

(3) வருடாந்த வருமானமும் மொத்த இலாப எல்லையும் கீழ்வருமாறு இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது:

| | **ஆண்டு 1** | **ஆண்டு 2** | **ஆண்டு 3** | **ஆண்டு 4** | **ஆண்டு 5** |
|---|---|---|---|---|---|
| **வருமானம் (ரூபா)** | 250,000,000 | 280,000,000 | 352,000,000 | 390,000,000 | 440,000,000 |
| **வருமானம் மீதான GP எல்லை** | 15% | 16% | 20% | 25% | 28% |

(4) தேய்மானம் மற்றும் வாடகை உள்ளிட்ட வருடாந்த நிலையான மேந்தலைகள் முதலாவது ஆண்டில் ரூபா 30 மில்லியனாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. தேய்மானம் மற்றும் வாடகை தவிர்ந்த ஏனைய நிலையான மேந்தலைகள் 2 ஆவது ஆண்டிலிருந்து ஒவ்வொரு ஆண்டும், ஆண்டிற்கு 10% அதிகரிப்பைக் கொண்டிருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

(5) செயற்றிட்டத்தை ஆரம்பிக்கும்போது செலவு செய்யப்பட வேண்டிய ஆரம்ப சந்தைப்படுத்தல் செலவினங்களாக ரூபா 8 மில்லியன் அமையுமென எதிர்பார்க்கப்படுவதுடன் தொழிற்படு மூலதனமாக ரூபா 20 மில்லியன் இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

(6) கம்பனி வருடாந்தம் 24% இல் வரி செலுத்துவதுடன் அது அந்தந்த வருடத்திலேயே செலுத்தப்பட வேண்டும்.

(7) கம்பனியின் மூலதனக் கிரயம் 22% ஆகும்.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) புதிய செயற்றிட்டத்தின் நிகர இற்றைப் பெறுமதியை (NPV) **கணிக்குக.** (13 புள்ளிகள்)

(b) கம்பனி புதிய செயற்றிட்டத்தை முன்னெடுக்க வேண்டுமா என்பதை **அடையாளங் காண்க.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

## வினா 10

(A) **வரையறுக்கப்பட்ட கோட்டு கம்பனி பொருள் C2** ஐப் பல செயன்முறைகள் ஊடாகத் தயாரிக்கிறது. ரூபா 42,575,000/- கிரயமான 300,000 மீற்றர் மூலப்பொருள்கள் செயன்முறை I இல் உள்ளிடப்பட்ட அதே வேளை, **செயன்முறை** I இற்கு ரூபா 27,690,000/- நேர் கூலியும் ரூபா 16,614,000/- மாறும் உற்பத்தி மேந்தலைகளும் ஆண்டின் காலப்பகுதியில் செலவிடப்பட்டுள்ளன.

ஆண்டின் ஆரம்பத்தில், 25,000 மீற்றர் ஆரம்ப புத்துருவாகும் வேலைகள் கீழ்வரும் பூர்த்தி மட்டங்களில் இருப்பில் இருந்தன :

| | |
|---|---|
| நேர் பொருள் | 100% பூர்த்தி – பெறுமதி ரூபா 3,750,000/- |
| நேர் கூலி | 25% பூர்த்தி – பெறுமதி ரூபா 534,000/- |
| மாறும் மேந்தலை | 20% பூர்த்தி – பெறுமதி ரூபா 199,000/- |

ஆரம்ப புத்துருவாகும் வேலை, சராசரிக் கிரய அடிப்படையில் கையாளப்படுகிறது.

ஆண்டின் இறுதியில், 288,000 மீற்றர்கள் **செயன்முறை II** இற்கு மாற்றப்பட்டதுடன், நேர் பொருள், கூலி மற்றும் மாறும் மேந்தலைகள் தொடர்பில் 100%, 50% மற்றும் 45% பூர்த்தி மட்டங்களில் 32,000 மீற்றர் இறுதிப் புத்துருவாகும் வேலைகள் இருப்பில் இருந்தன.

உள்ளீட்டுப் பொருள்களிலிருந்தான சாதாரண நட்டம் 5% ஆக இருப்பதுடன் சாதாரண நட்டத்தின் ஒடிவுப் பெறுமதி மீற்றரொன்றுக்கு ரூபா 40/- ஆகும்.

**நீங்கள் செய்யவேண்டியது :**

சமான அலகுகள் மற்றும் கிரயக் கூற்றையும் **செயன்முறை I** கணக்கையும் **தயாரிக்குக.** (14 புள்ளிகள்)

(B) **வரையறுக்கப்பட்ட ஜிக்கிள் கம்பனி** அண்மையில் **ஜிக்கிலி** என்ற ஒரு புதிய பொருளை விருத்தி செய்துள்ளது. இந்தப் பொருளின் விற்பனை மற்றும் விநியோகத்திற்காக, இக்கம்பனியானது விற்பனை மற்றும் விநியோகங்களைக் கையாளுகின்ற ஒரு வெளித் தரப்பினரை (வெளிமூலமிடுதல்) ஈடுபடுத்துவது பற்றிச் சிந்திக்கிறது. வெளித் தரப்பினர் கீழ்வரும் மூன்று தெரிவுகளை வழங்கியுள்ளனர்:

தெரிவு 1 : மாதாந்தம் ரூபா 600,000/- என்ற நிலையான கட்டணம்

தெரிவு 2 : மாதாந்தம் ரூபா 280,000/- என்ற நிலையான கட்டணமும் விற்பனை மீது 1.2% பணிசையும் (தரகு).

தெரிவு 3 : விற்பனை மீது 2.3% பணிசை.

**வரையறுக்கப்பட்ட ஜிக்கிள் கம்பனியின்** சந்தைப்படுத்தல் முகாமையாளர் முதல் 12 மாதங்களுக்கான விற்பனை கீழ்வருமாறு அமையுமென மதிப்பிட்டுள்ளார் :

| | **மாதாந்த விற்பனை (எண்ணிக்கை)** | **நிகழ்தகவு** |
|---|---|---|
| கூடியது | 100,000 | 0.55 |
| குறைந்தது | 60,000 | 0.45 |

விற்பனை விலை அலகொன்றிற்கு ரூபா 300/- என நிர்ணயிக்கப்பட்டுள்ள அதே வேளை மாறும் கிரயமானது குறைந்தளவான விற்பனை எனின் அலகொன்றிற்கு ரூபா 230/- ஆகவும் கூடியளவான விற்பனை எனின் அலகொன்றிற்கு ரூபா 210/- ஆகவும் இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) மூன்று தெரிவுகளினதும் எதிர்பார்க்கப்பட்ட பெறுமதிகளைக் **கணிக்குக.** (05 புள்ளிகள்)

(b) எந்தத் தெரிவினைத் தேர்வுசெய்ய வேண்டுமென அதற்கான காரணங்களுடன் **இனங்காண்க.** (01 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

பகுதி C முடிவு

## செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வரைவிலக்கணம் (பொருள் வரையறை) |
|---|---|---|
| **மட்டம் 01**<br>**கிரகித்தல்**<br><br>முக்கிய தகவலை ஞாபகப்படுத்தி விபரித்தல் | **பொருள் வரைறை செய்க / வரைவிலக்கணம் செய்க (Define)** | தன்மை, வியாபகம் அல்லது பொருள் பற்றி விபரித்தல் |
| | **வரைக (Draw)** | வரிப்படம் அல்லது வரைபடம் வடிவில் வரைந்து காட்டுதல் |
| | **அடையாளங் காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் தெரிந்து கொள்ளல் அல்லது தெரிவு செய்தல் |
| | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதுதுல் |
| | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்க ரீதியாக அல்லது காரண ரீதியாக தொடர்புகளை நிலைநாட்டல் |
| | **கூறுக / குறிப்பிடுக (State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக தெரிவித்தல் |
| | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate / Compute)** | கணித ரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | **ஆராய்க (Discuss)** | முடிவொன்றினை அடையும் நோக்கில் வேறுபட்ட விடயங்களை விவாதத்தின் மூலம் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **விபரிக்குக (Explain)** | உரிய உண்மைகளை வெளிக்காட்டி, தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | **பொருள் விளக்குக / கருத்துக் கூறுக (Interpret)** | விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தெளிவுபடுத்தல் |
| | **ஏற்பிசைவு செய்தல் (Recognize)** | அறிவை அல்லது அவை சார்ந்த அனுபவத்தினைக் கொண்டு, செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இல்லாமையைக் காட்டுதல் |
| | **பதிவு செய்க (Record)** | உரிய பதிவுகளை விரிவாகப் பதிவு செய்தல் |
| | **தொகுக்குக / சுருக்கத்தைத் தருக (Summarize)** | பிரதான விடயங்களில் (உண்மைகள் அல்லது பெறுமதிகள்) சுருக்கமான கூற்றினைத் தருதல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 02**<br>**பியோகித்தல்**<br><br>கற்றதைக் கொண்டு வேறு ஒன்றினை அறிவதற்கு அறிவைப் பயன்படுத்துதல் / வினாக்களைத் தீர்த்தல் | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல் |
| | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | **எடுத்துக் காட்டுடன் விபரிக்குக (Demonstrate)** | விசேடமாக உதாரணங்களுடன் நிறுவுதல் |
| | **வரைபடத் தாளில் வரைக (Graph)** | வரைபடம் ஒன்றின் மூலம் காட்டுதல் |
| | **தயாரிக்குக (Prepare)** | கேட்கப்பட்ட விடயத்தினை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | **முன்னுரிமைப்படுத்துக (Prioritize)** | முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஒழுங்கு படுத்துதல் அல்லது வரிசைப்படுத்துதல் |
| | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க (Reconcile)** | வேறொன்னுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடு அல்லது விளக்கங்களின் மூலம் தீர்வு காணல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 03**<br>**பகுப்பாய்வு**<br><br>எண்ணங்களுக்கு இடையில் தொடர்புகளை ஏற்படுத்தி ஒப்பிடுதலும் வேறுபடுத்தலும் / திறந்த வினாக்களைத் தீர்த்தல் | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது வெளிப்பாட்டினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **வேறுபடுத்துக (Contrast)** | வேற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **பேதப்படுத்துக/வித்தியாசப்படுத்துக /வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்தும் வித்தியாசங்களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | **சுருக்கமாகக் காட்டுக / குறிப்பிடுக (Outline)** | முக்கிய குணாம்சங்களின்/சிறப்பியல்புகளின் தொகுப்பினைத் தருதல் |